सत्यमेव जयते

GOVERNMENT OF PUDUCHERRY

# EXPERT GROUP RECOMMENDATION ON THE SOCIAL IMPACT ASSESSMENT REPORT

ACQUISITION OF LAND AT R.S.NO.100/3 pt. OF ARIYUR REVENUE VILLAGE IN VILLIANUR TALUK, TO AN EXTENT OF 00.42.06 H.A.C FOR THE PUBLIC PURPOSE OF "PROVISION OF FREE HOUSE SITES TO POOR LANDLESS SC/ST/OEBC PEOPLE" FOR THE REQUISITION DEPARTMENT VIZ., THE ADI-DRAVIDAR WELFARE AND SCHEDULED TRIBES WELFARE DEPARTMENT, PUDUCHERRY.

Prepared & Submitted by

A. Sureshraj,
COMMISSIONER
OULGARET MUNICIPALITY

## 1. CONSTITUTION OF EXPERT GROUP:

1.1 The U.T Administration of Puducherryhas constituted an independent multidisciplinary expert group vide G.O. Ms. No. 22/2024 dated 27.11.2024 of Department of Revenue and Disaster Management. Puducherry for appraisal of social Impact Assessment report prepared by the SIA team U/s. 7(1) & (2) of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition Rehabilitation and Resettlement Act, 2013 for the purpose of acquisition of land at R.S. No.100/3pt of Ariyur Revenue Village in Villianur Taluk, Puducherry District. The expert Group comprises the following officials/non-officials.

| SI. No. | Name & Designation (Tvl.) | Department/ Organisation |
|---|---|---|
| 1. | A. Sureshraj, Commissioner | Oulgaret Municipality, Puducherry. |
| 2. | K. Veeraselvam Chief Town Planner, | Town & Country Planning Department, Puducherry. |
| 3. | Dr.C. Aruna, Asst.Professor | Department of Sociology, Pondicherry University |
| 4. | Dr.C.Sathish Kumar, Asst.Professor | Department of Social Work, Pondicherry University. |
| 5. | C.Ramesh Commissioner, | Villianur Commune Panchayat, Puducherry. |
| 6. | Kannan, Secretary | Naam Trust, No.234, 1st Floor, Airport Road, Pakkamudayanpet, Puducherry-8. |
| 7. | D. Gunaseelan, Secretary, | Arumai Rehabilitation Organization, No.23, M G Road, Puducherry-1. |

## 2. MANDATE OF EXPERT GROUP:

2.1 The expert group constituted under sub–sections (1) & (2) of section 7 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act 2013 after examining the Social Assessment Report submitted by the SIA team should analyze as to:

(i) Whether the project serves any public purpose? ;

(ii) Whether the potential benefits outweigh the social costs and adverse social impact?;

(iii) Weather there is other less displacing option available with effective Rehabilitation plan? ; and

(iv) Whether the extent of land proposed to be acquired is the absolute bare minimum extent needed for the project?

2.2 The meeting of Expert group was held on 30.12.24 at 3.30 PM in the chamber of the Commissioner Oulgaret Municipality and was attended by the members except Dr. C. Aruna, Assistant Professor, Department of Social Work, Pondicherry University, DR. C. Satish Kumar, Assistant Professor, Department of Social Work, Pondicherry University as they were reportedly out of station and Thiru D. Gunaseelan, Secretary Arumai Rehabilitation Organisation, Puducherry has not attended though advance intimation was given. Thiru Kannan, Secretary of Naam Trust sent his representative Thiru T. Gunasekaran. On behalf of Thiru V.Veeraselvam, Chief Town Planner, Town & Country Planning Department, Thiru Elango, Junior Town Planner attended the meeting and on behalf of Thiru C. Ramesh, Commissioner, Villianur Commune Panchayat Thiru Thirunavikarasu, Assistant Engineer attended. The Social Impact Report prepared in relation to the acquisition of land at RS No.100/3pt of Ariyur Revenue Village in Villianur Taluk for the public purpose viz., "Provision of free house sites to poor landless SC/ST/OEBC people", for the requisition department viz., the Adi-Dravidar Welfare and Scheduled Tribes Welfare Department, Puducherry was examined by the Expert Group. Copy of the SIA report was also shared among the Group Members. Further, the said report was also explained to the Members who were present during the meeting on 30.12.2024

2.3 During field visit on 30.12.2024 at about 4.30 pm, it was ascertained that presently the land is empty, barren and lots of unwanted thorny bushes and four lamp posts (Electrical) are existing. Only two posts would need to be shifted or removed. There are no families residing nor there are any other infrastructural facilities available in the proposed land. Apart from the lamp posts there are no other movable or immovable properties in the land. The land is close by existing residential area and suitable for the purpose.

2.4 Post field visit, the Chairman suggested that the Members of the Expert Group may inspect/visit the site and submit their recommendation individually, if they desire so. The Expert Group examined the SIA study report, the proceeding of public hearing, the details of Socio Economic Study conducted for the purpose of acquisition of land at R.S. No.100/3pt of Ariyur Revenue Village in Villianur Taluk, Puducherry District.

2.5 The Expert Group observed that the acquisition of land at RS No.100/3pt of Ariyur Revenue Village in Villianur Taluk for the public purpose viz., "Provision of free house sites to poor landless SC/ST/OEBC people", for the requisition department viz., the Adi-Dravidar Welfare and Scheduled Tribes Welfare Department, Puducherry is for a valid public purpose that would provide housing facilities for poor people

2.6 The Expert Group observed that the entire land proposed for acquisition belongs to single owner and the socio-economic status of the owner and his family is also sound. The Social Impact Assessment report revealed that the land owner have three sons and one daughter. All are married and settled. One of the son settled in Chennai with his family and daughter is also married and settled in Chennai. The land owner presently lives with two of his sons and grandchildren in the same house. Hence livelihood of no individual is affected due to the present land acquisition. It is further observed that there is no person with Disability, mentally challenges, orphan or destitute affected by this Acquisition. There is no adverse impact on any Social Culture Organization, Political organization, Civic Society Organization and Administrative Organization getting affected by the acquisition. Therefore, the acquisition proposal does not envisage displacement of any project affected person and consequently the need for a rehabilitation plan does not arise.

## 3. SOCIAL COSTS AND IMPACTS:

3.1 The acquisition towards "Provision of free house sites to poor landless SC/ST/OEBC people", for the requisition department viz., the Adi-Dravidar Welfare and Scheduled Tribes Welfare Department, Puducherry, the beneficiaries may be mostly daily wages earners. They would construct houses and settle down. Their standard of living would improve and they might be free from paying rent and hence there is no impact on the social cost to the village. Basic infrastructure amenities would need to be provided.

## 4. EXTENT REQUIREMENT:

4.1 The Expert group observed that the land acquisition is being undertaken to the barest minimum extent of 00.42.06 H.A.C., at RS No.100/3pt of Ariyur Revenue Village in Villianur Taluk for the public purpose viz., "Provision of free house sites to poor landless SC/ST/OEBC people", for the requisition department viz., the Adi-Dravidar Welfare and Scheduled Tribes Welfare Department and therefore there is no Impact to anyone due to implementation of the project. Further, there are no suitable alternate Government lands available for the proposed acquisition in the vicinity.

## 5. CONCLUSION/RECOMMENDATION:

5.1 After going through the SIA report and social profile of the area the Expert Group made the following observation/recommendations:

(i) Land owner is ready to give the land provided he is adequately compensated as per provisions of RFCTLARR Act, 2013;

(ii) The proposed acquisition shall ensure to distribute house site to the beneficiaries as early as possible;

(iii) No suitable alternate Government lands are available for the proposed acquisition; and

(iv) The Social Impact Assessment is found to be appropriate

(Dr.C. Sathish Kumar)
Asst.Professor
Department of Social Work,
Pondicherry University.

(C. Ramesh)
Commissioner,
Villianur Commune Panchayat

(D. Gunaseelan)
Secretary,
Arumai Rehabilitation Organization,
No.23, M G Road, Puducherry-1.

(Kannan)
Secretary,
Naam Trust,
No.234, 1st Floor, Airport Road,
Pakkamudayanpet, Puducherry.

(K. VEERASELVAM)
Chief Town Planner,
Town & Country Planning Department

(A. SURESHRAJ)
Commissioner
Oulgaret Municipality

புதுச்சேரி மாவட்டம், 52- அரியூர் வருவாய் கிராமத்தில் , "நிலமற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற பின்தங்கிய பிரிவினை சேர்ந்த ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை வழங்குவது" என்ற பொது நோக்கத்திற்காக, நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான சமூக தாக்க கணிப்பு அறிக்கையை மதிப்பீடு செய்வதற்காக நாளது 27.11.2024 தேதியிட்ட வருவாய் துறையின் பல்வகை அரசாணை எண். 22/2024 -ன்படி அமைக்கப்பட்ட பல்துறை வல்லுநர் குழுவின் அறிக்கை

****

வல்லுநர் குழு அமைப்பு :-

1. நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை சட்டம், 2013- இன் பிரிவு 7 உட்பிரிவு (1) மற்றும் (2) - ன் படி, புதுச்சேரி மாவட்டத்தின் 52 - அரியூர் வருவாய் கிராமத்தில் "நிலமற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற பின்தங்கிய பிரிவினை சேர்ந்த ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை வழங்குவது" என்ற பொது நோக்கத்திற்காக நிலம் கையகப்படுத்துவது தொடர்பான, சமூக தாக்க கணிப்பு குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையினை மதிப்பீடு செய்து, உரிய பரிந்துரையை வழங்க வேண்டி, உழவர்கரை நகராட்சி ஆணையர் அவர்கள் தலைமையில் பின்வரும் உறுப்பினர்களுடன் வல்லுநர் குழுவானது ஏற்படுத்தப்பட்டது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | துறை / அமைப்பு |
|---|---|---|
| 1 | தலைமை நகர அமைப்பாளர் | நகர மற்றும் கிராம அமைப்புத் துறை , புதுச்சேரி |
| 2 | டாக்டர். சி. அருணா,<br>உதவி பேராசிரியர் | சமூகவியல் துறை ,<br>புதுவை பல்கலைக்கழகம் |
| 3 | டாக்டர். சி. சதீஷ்குமார்,<br>உதவி பேராசிரியர் | சமூகப் பணித்துறை ,<br>புதுவை பல்கலைக்கழகம் |
| 4 | ஆணையர் | வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து,<br>வில்லியனூர் |
| 5 | கண்ணன்,<br>செயலாளர் | 'நாம் அறக்கட்டளை ' எண்.234, முதல் தளம், விமான நிலைய சாலை, பாக்கமுடையான்பட்டு , புதுச்சேரி - 605 008. |
| 6 | திரு. D. குணசீலன்<br>செயலாளர் | 'அருமை' மறுவாழ்வு அமைப்பு, எண்.23, மகாத்மா காந்தி சாலை, புதுச்சேரி - 605 001. |

**2. வல்லுநர் குழுவிற்கான ஆணை:-**

2.1 நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை சட்டம், 2013- இன் பிரிவு 7 உட்பிரிவு (1) மற்றும் (2) - ன் படி அமைக்கப்பட்ட இந்த வல்லுநர் குழுவானது சமூக தாக்க மதிப்பீட்டு குழுவால் ஆய்வு செய்து வழங்கப்பட்ட சமூக தாக்க மதிப்பீட்டு அறிக்கையினை ஆய்வு செய்வதுடன் கீழ்கண்ட கூறுகளின் அடிப்படையில் ஆய்வு செய்வதாகும் :-

- இந்தத் திட்டம் ஏதேனும் பொது நோக்கத்திற்குப் பயன்படுகிறதா?
- சாத்தியமான நன்மைகள் சமூக செலவுகள் மற்றும் பாதகமான சமூக தாக்கங்களை விட அதிகமாக உள்ளதா?
- குறைவான இடப்பெயர்ச்சி விருப்பங்கள் உள்ளனவா?
- கையகப்படுத்த முன்மொழியப்பட்ட நிலத்தின் அளவு, திட்டத்திற்குத் தேவையான முழுமையான குறைந்தபட்ச அளவாக உள்ளதா?

2.2 இந்த நிபுணர் குழுவின் கூட்டமானது நாளது 30.12.2024 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் உழவர்கரை நகராட்சி ஆணையரின் அலுவலகத்தில் நடைபெற்றது. குழுவின் உறுப்பினர்களில் முனைவர் C. அருணா, உதவி பேராசிரியர், சமூகவியல் துறை, முனைவர் C . சதீஷ்குமார் , உதவி பேராசிரியர் , சமூகப்பணித்துறை , புதுவை பல்கலை கழகம், மற்றும் திரு.D. குணசீலன், செயலாளர் , 'அருமை ' மறுவாழ்வு அமைப்பு , புதுச்சேரி ஆகியோர் தவிர்த்து, பிற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் . தலைமை நகர அமைப்பாளர் சார்பில் நகர மற்றும் கிராம அமைப்பு துறையின் இளநிலை நகர அமைப்பாளர் திரு. இளங்கோ மற்றும் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் சார்பில் திரு. திருநாவுக்கரசு, உதவி பொறியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில், புதுச்சேரி மாவட்டம், வில்லியனூர் வட்டம் , 52 - அரியூர் வருவாய் கிராமத்தில் "நிலமற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற பின்தங்கிய பிரிவினை சேர்ந்த ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை வழங்குவது" என்ற பொது நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படவுள்ள நில ஆர்ஜிதம் தொடர்பாக வழங்கப்பட்ட சமூக தாக்க கணிப்பு குழுவின் அறிக்கையானது அனைத்து உறுப்பினர்களின் பார்வைக்கு வழங்கப்பட்டு, இது தொடர்பாக விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

2.3 கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதியை 30.12.2024 அன்று பிற்பகல் 4.30 மணியளவில் நிபுணர் குழு நேரில் பார்வையிட்டது. குறிப்பிட்ட அந்த நிலப்பகுதியானது தரிசு நிலமாகும் , தற்போதைய நிலையில் புதர்கள் மண்டி காணப்படுகிறது, நான்கு மின் கம்பங்கள் தவிர வேறு எதுவும் இந்த நில பரப்பில் இல்லை. கையகப்படுத்தி இலவச மனைகள் வழங்கும் பட்சத்தில், நான்கு மின் கம்பங்களில் இரண்டு மின் கம்பங்கள் அகற்றப்பட வேண்டும். மேலும், குடியிருப்புகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள. இந்த நில பரப்பில் குடியிருப்புகள் ஏதும் இல்லை என்பதோடு, அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏதும் இல்லை. கையகப்படுத்த உத்தேசித்துள்ள உள்ள நிலமானது குறிப்பிட்ட அந்த பொது நோக்கத்திற்கு பொருத்தமானதாகும்.

2.4 புதுச்சேரி மாவட்டம், வில்லியனூர் தாலுகாவில் உள்ள அரியூர் வருவாய் கிராமத்தின் R.S.No.100/3pt இல் நிலம் கையகப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட சமூக தாக்க கணிப்பு குழுவின் ஆய்வு அறிக்கை, பொது விசாரணையின் நடவடிக்கைகள், சமூகப் பொருளாதார ஆய்வு விவரங்கள் ஆகியவற்றை நிபுணர் குழு ஆய்வு செய்தது. களப் பார்வைக்குப் பிறகு, நிபுணர் குழுவின் உறுப்பினர்கள் கையகப்படுத்த உத்தேசித்துள்ள நிலப் பகுதியினை பார்வையிட்டு/ஆய்வு செய்து, அவர்கள் விரும்பினால், தனித்தனியாகத் தங்கள் பரிந்துரையைச் தலைவரிடம் சமர்ப்பிக்க கேட்டுக்கொண்டார்.

2.5 புதுச்சேரி அரசின் ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்காக, புதுச்சேரி மாவட்டம் , வில்லியனூர் தாலுகாவில் உள்ள அரியூர் வருவாய் கிராமத்தின் R.S.No.100/3pt இல் மேற்கொள்ளப்பட உள்ள நில ஆர்ஜிதமானது "நிலமற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற பின்தங்கிய பிரிவினை சேர்ந்த ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை வழங்குவது" என்ற சரியான பொது நோக்கத்திற்காகவே மேற்கொள்ளப்படுகிறது என நிபுணர் குழு கருதுகிறது.

2.6 சமூக தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் வாயிலாக, கையகப்படுத்த உத்தேசித்துள்ள நிலமானது ஒருவருக்கு மட்டுமே சொந்தமானது எனவும் அவர்தம் குடும்பமானது நல்ல பொருளாதார நிலையில் இருப்பதாகவும் தெரிய வருகிறது . உரிமையாளருக்கு மூன்று மகன்கள் மற்றும் ஒரு மகள் இருப்பதாகவும் , அனைவரும் திருமணமாகி விட்டதாகவும், ஒரு மகன் மற்றும் மகள் சென்னையில் குடும்பத்துடன் வசித்து வருகின்றனர். நிலத்தின் உரிமையாளர் தற்போது தனது இரண்டு மகன்கள் மற்றும் பேரக்குழந்தைகளுடன் ஒரே வீட்டில் வசித்து வருகிறார். எனவே தற்போது நிலம் கையகப்படுத்துவதால் எந்த ஒரு தனிநபரின் வாழ்வாதாரமும்

பாதிக்கப்படவில்லை. இந்த கையகப்படுத்துதலால் ஊனமுற்றவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், அனாதைகள் அல்லது ஆதரவற்றவர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை என அறிய முடிகிறது. மேற்படி , நிலம் கையகப்படுத்துதலால், எந்தவொரு சமூக, கலாச்சார , அரசியல், குடிமை சமூக மற்றும் நிர்வாக அமைப்புகளுக்கும் பாதிப்பு எதுவும் இல்லை என நிபுணர் குழு கருதுகிறது. எனவே, இந்த கையகப்படுத்தல் முன்மொழிவு பொறுத்தவரை பாதிக்கப்படும் நபர்களுக்கான இடப்பெயர்ச்சி மற்றும் மறுவாழ்வு திட்டத்தின் தேவை என்பது எழவில்லை.

3. சமூக செலவுகள் மற்றும் தாக்கங்கள்

புதுச்சேரி அரசின், ஆதி-திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் "நிலமற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற பின்தங்கிய பிரிவினை சேர்ந்த ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை வழங்குவது" என்ற திட்டத்தின் பயனாளிகள் பெரும்பாலும் தினக்கூலி பெறுபவர்களாக இருப்பார்கள், இவர்கள் வீடு கட்டி குடியேறுவைத்தான் மூலம், இவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுவதோடு வாடகை செலுத்துவதில் இருந்து விடுபட வாய்ப்புள்ளது. அடிப்படை கட்டமைப்பு வசதிகளை செய்துதரும் செலவினம் தவிர்த்து, கிராமத்தை பொறுத்தவரை வேறு எந்த சமூக செலவும் ஏற்பட வாய்ப்பில்லை என நிபுணர் குழு கருதுகிறது.

தேவையான அளவு

புதுச்சேரி அரசின் ஆதி திராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலத்துறைகாக்க, புதுச்சேரி மாவட்டம் , வில்லியனூர் தாலுக்கா, 52 - அரியூர் வருவாய் கிராமத்தில் "நிலமற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற பின்தங்கிய பிரிவினை சேர்ந்த ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை வழங்குவது" என்ற பொது நோக்கத்திற்காக, கையகப்படுத்தப்படும் 00.42.06 H .A .C பரப்பளவானது குறைவானதே எனவும், இதனால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்பதோடு , இத்திட்டத்திற்கு ஏற்ற வகையிலான அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இப்பகுதியில் இல்லை எனவும் நிபுணர் குழுவின் ஆய்வில் தெரியவருகிறது.

<u>முடிவு/பரிந்துரை</u>

சமூக தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் இந்த நிபுணர் குழு கருத்தின் அடிப்படையில், கீழ்கண்ட பரிந்துரைகளை ஒருமனதாக வழங்குகிறது :-

i) நில உரிமையாளர் நிலத்தை வழங்கத் தயாராக இருக்கிறார், எனவே நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமா்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை சட்டம், 2013- ன் படி போதுமான இழப்பீடு வழங்கப்பட்டால் போதுமானது .

ii) முன்மொழியப்பட்ட நிலம் கையகப்படுத்தல் என்பது நடைபெற்றால் ,பயனாளிகளுக்கு விரைவாக வீட்டு மனை வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படும்.

iii) முன்மொழியப்பட்ட கையகப்படுத்துதலுக்கு பொருத்தமான மாற்று அரசு நிலங்கள் எதுவும் இல்லை; மற்றும்

iv) சமூகத் தாக்க மதிப்பீடு அறிக்கை பொருத்தமானதாகக் காணப்படுகிறது

***